முற்பகல் 10-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 364, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

364—

அங்கன்வாடி மையக் கட்டடம்

***31838—திரு. ஆ. நாராயணன்:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, களக்காடு ஊராட்சி ஒன்றியம், ஏர்வாடி பேரூராட்சியிலுள்ள அங்கன்வாடி மையத்திற்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதி, களக்காடு ஒன்றியம், ஏர்வாடி பேரூராட்சியில் 9 அங்கன்வாடி மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இதில் 8 முதன்மை மையங்கள் அரசுக் கட்டடத்திலும், ஒரு குறு மையம் ஏர்வாடி பெரும் பிரிவில் வாடகைக் கட்டடத்திலும் செயல்பட்டு வருகின்றன. ஏர்வாடி பெரும் பிரிவில் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வரும் அங்கன்வாடி மையக் கட்டடத்திற்குப் புதிய கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு, 29-6-2014 அன்று மாண்புமிகு நாங்குநேரி சட்டமன்ற உறுப்பினர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள்மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன் அவர்கள்.*

திரு. ஆ. நாராயணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்குநேரி தொகுதி, ஏர்வாடி பேரூராட்சி,* T.T.A. *பள்ளியில் உள்ள அங்கன்வாடி மையம் 4-ல் 25 குழந்தைகள்*

2014 ஆகஸ்ட் 7]

கல்வி பயின்று வருகிறார்கள். இந்த மையத்திற்குச் சொந்தக் கட்டடம் இல்லை. அதைப்போல, லஷ்மி நரசிங்கபுரத்தில் E.A.S.S.A. தொடக்கப் பள்ளியில் உள்ள மற்றொரு அங்கன்வாடி மையத்தில் 25 குழந்தைகள் கல்வி பயின்று வருகிறார்கள். இந்த மையத்திற்கும் சொந்தக் கட்டடங்கள் இல்லை. 5-வது வார்டில் உள்ள அங்கன்வாடி மையத்தில் 23 குழந்தைகள் கல்வி பயின்று வருகிறார்கள். இம்மையம் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி வளாகத்தில் இயங்கி வருகிறது. இம்மையத்திற்கும் சொந்தக் கட்டடம் இல்லை. ஏற்கெனவே, மாண்புமிகு அம்மா அவர்கள் ஊராட்சிகளுக்கு 11 இடங்களை ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். பேரூராட்சிக்கு எந்தவித இடமும் ஒதுக்கவில்லை. எனவே, தாங்கள் மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, பேரூராட்சிக்கு அங்கன்வாடி மையக் கட்டடம் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்மிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, திருநெல்வேலி மாவட்டத்தில் புதியதாகக் கட்டப்பட இருக்கும் மொத்த மையங்கள் 128. அதிலே, நாங்குநேரி வட்டாரத்தில் மட்டும் 7 கட்டடங்கள் கட்டப்படவிருக்கின்றன. களக்காடு வட்டாரத்தில் புதியதாகக் கட்டப்படவிருக்கும் மையங்களின் எண்ணிக்கை 4. பேரூராட்சிகளில் கட்டவேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டு இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து ஏற்கெனவே கொடுத்துக் கொண்டிருக்கக்கூடிய நிதியையும், அந்தப் பேரூராட்சிப் பகுதிகளுக்கு ஒதுக்கீடு செய்து, அவர்கள் கட்டிக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கன்வாடி மையக் கட்டடம் கட்டிக்கொள்வதற்கு ஒதுக்கீடு செய்யும் பணம் போதவில்லையென்று சொன்னால், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கருத்துருவைப் பெற்று, மாவட்ட ஆட்சித் தலைவருக்கென்று இருக்கக்கூடிய அதிகாரத்தைப் பயன்படுத்தி, விருப்புரிமை நிதியை வைத்து, அங்கன்வாடி மையக் கட்டடம்

கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன் அவர்கள்.*

திரு. ஆ. நாராயணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து ஆண்டிற்கு 4 கட்டடங்கள் வீதம் கட்டிக்கொண்டு வருகிறோம். இருந்தாலும், நாங்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் மனு கொடுத்து, அவருடைய ஆலோசனையின்பேரில், அதனைக் கட்டுவதற்கு ஏற்பாடு செய்கிறோம் என்பதைக் கூறி, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.*

திரு. க. பாண்டியராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்னையின் பாசத்தினை குழந்தைகளுக்கும், பிள்ளைகளின் அன்பைப் பெரியவர்களுக்கும், ஒரே குடையில் வழங்கி வரும் ஒருங்கிணைந்த முதியோர், குழந்தைகள் காப்பகங்களுக்கு 'அம்மா அன்பகம்' என்று பெயரிட்டு, அனைத்து ஒன்றியங்களுக்கும் இரண்டு அன்பகங்கள் அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன். குறிப்பாக, எனது தொகுதியில் இன்னும் இரண்டு அம்மா அன்பகங்களை உருவாக்க அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திருப்பெயரைச் சூட்டுவதற்கு துறையின் சார்பிலே நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இன்னும் அவர்களுடைய வட்டாரத்திலே அந்தக் காப்பகங்கள் துவங்கப்பட வேண்டுமென்றும், முதியோர் மற்றும் குழந்தைகள் காப்பகங்கள்*

துவங்கப்பட வேண்டுமென்றும் கோருகிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு இதனைக் கொண்டுசென்று, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 365, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சீனிவாசன், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

365—

பலவகை தொழில்நுட்பக் கல்லூரி

*__32357__—**திரு. ஆர். சீனிவாசன்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆற்காடு தொகுதியில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், ஆற்காடு தொகுதியில் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவங்குவது குறித்து, தற்போது கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சீனிவாசன் அவர்கள்.*

திரு. ஆர். சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களில் முதற்கண் என் பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*